வாசிக்க: லூக்கா 23:44-56

***"பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக் 23:46)***

"முடிந்தது" என்று வீரமுழக்கமிட்ட ஆண்டவர் அத்துடன் தமது சிலுவை வார்த்தைகளை முடித்துவிடவில்லை. தந்தையின் மடியில் செல்லப்பிள்ளையா யிருந்தவர் மனுக்குலத்தின் இரட்சிப்புக்காகத் தமது உயிரைக் கொடுப்பதற்காகவே விண்ணகம் துறந்து மண்ணுலகு வந்து, தந்தையின் திருச்சித்தத்தை முற்றிலும் நிறைவேற்றி முடித்து, இறுதியில் சங்கீதம் 31:5ஐ நினைவுபடுத்தி, தாம் நேசித்த தந்தையின் கைகளிலே தமது ஆவியைப் பத்திரமாக ஒப்புவிக்கிறார். இயேசுவின் உயிரை எவரும் எடுக்கமுடியவில்லை; அவர் தாமாகவே உவந்து தமது உயிரை விட்டார்.

இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். இருந்தவரும், இருப்பவரும், இருக்கப்போகிறவரும் அவரே. துவக்கமும் முடிவும் அவரே. அகரமும் அவரே, னகரமும் அவரே. நாளையைக் குறித்து நாம் கலங்கத் தேவையில்லை.

"நான் அவைகளுக்கு நித்திய வாழ்வைக் கொடுக்கிறேன். அவைகள் ஒரு போதும் கெட்டுப்போவதில்லை; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை, அவைகளை எனக்குத் தந்த என் தந்தை எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் தந்தையின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது" என்றார் இயேசு (யோ 10:28,29). இயேசுவின் கரங்களில், பிதாவின் கரங்களில்—இணையற்ற பாதுகாப்பு!

எனவேதான் பவுல் மிகுந்த நம்பிக்கையுடன் இவ்விதம் கூறுகிறார்: "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்றறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறா ரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12).

வழுவாதபடி காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்தவும் கடவுள் வல்லவரா யிருக்கிறார் (யூதா 24).

அப்படியானால் ஒரு கேள்வி: இரட்சிப்பை ஒருவர் இழக்கமுடியுமா? வேத வல்லுநர்கள் இக்கேள்வியில் இரு பிரிவாய் நிற்கிறார்கள். முதல் பிரிவினர் கடவுள் செய்வதை அழுத்திக் கூறுகிறார்கள்; அடுத்தவர் மனிதன் செய்யவேண்டியதை வலியுறுத்துகிறார்கள். இரண்டையும் இணைத்தால் வேதத்தின் சமநிலைச் சத்தியம் கிடைக்கிறது. என்னைக் காக்கக் கடவுள் வல்லவர்; அவரால் முடியும். அவரிட மிருந்து பிசாசு என்னைப் பறித்துச்செல்லமுடியாது. ஆனால் அவரது கரத்தை நான் இறுகப் பற்றிக்கொள்ளவேண்டும். அவரது கரங்களில் என்றுமே பாதுகாப்பு தான்! நான் இல்லாது கடவுள் ஒன்றும் செய்யமாட்டார்; அவர் இல்லாது நான் ஒன்றும் செய்யமுடியாது!

*என் எண்ணம் போல நான் அலைந்தேனே,*
*என்னைத் தடுத்திட்ட தாருமில்லை;*
*உம் சிலுவை அன்பைச் சந்தித்தேனே,*
*நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில்!*